ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශේෂමානது
අංක 2465/16 - 2025 දෙසැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.12.04
2465/16 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், எந்தவொரு அரசாங்க நிறுவனங்கள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் எந்தவொரு அரசாங்கத்துடனும் நேரடி கூட்டிணைவுடன் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களால் “டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான பேரிடர் மீட்பு திட்டம்” இற்கு எந்தவொரு வெளிநாடுகள் (அரசாங்கங்கள்), வியாபார நிறுவனங்கள் உள்ளடங்கலான அமைப்புக்கள் தன்னார்வ கூட்டிணைவுகள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து நிவாரண நடவடிக்கைகள் அல்லது அத்தியாவசிய பொது சேவையின் தொடர்ச்சியினை பேணுவதற்காக உதவி/ நன்கொடைகளாக பெறப்படும், எந்தவொரு வீதத்திலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினையும் செலுத்த வேண்டிய இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்கள் மீதான பிரயோகிக்கப்பட வேண்டிய விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை தள்ளுபடி செய்வதற்கு இத்தால் கட்டளையிடுகிறேன். பின்வருவனவற்றிற்கு உட்பட்டு;

(அ) திட்டத்திற்கான இறக்குமதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட வேண்டும். மேலும் இந்த திட்டத்தின் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிற்கான விலக்கினை பெற்றுக் கொள்ளும் முகமாக அனர்த்த முகாமைத்துவ நிலையமானது சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு ஒரு பரிந்துரைக் கடிதத்தினை வழங்க வேண்டும்.

1A - PG 7381 — 428 (2025/12)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையைப் பெறுவதன் பேரில், அனைத்து நன்கொடைகளும் இலங்கை சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதியளிக்கப்பட வேண்டும்.

(இ) இந்த நடைமுறையின் கீழ் உதவி / நன்கொடையாகப் பெறப்பட்ட பொருட்கள் விதிக்கப்பட்ட நோக்கம் / நோக்கங்கள் அல்லது பயன்பெறுநர்களுக்கு, எந்தவித கட்டணமுமின்றி வழங்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் வரை, அத்தகைய பொருட்களிற்கு, மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் கடமை மற்றும் பொறுப்புக்கூற கடப்பட்டுள்ளார்கள், மற்றும்

(ஈ) இந்த நடைமுறையின் கீழ் உதவி/ நன்கொடையாகப் பெறப்பட்ட எந்தவொரு பொருட்களும், திறைசேரியின் செயலாளரின் முன் அனுமதி இன்றி விற்கவோ, மாற்றவோ அல்லது அழிக்கவோ அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நோக்கத்தைத் தவிர வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தவோ கூடாது. இந்த நடைமுறையை மீறும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பிரயோகிக்கப்படக்கூடிய வரிகளை அறவிடுவதற்கு, சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. இந்த கட்டளை தேசிய அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2025.11.28 ஆந் திகதிய 2464/31 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி மற்றும் அத்தியாவசிய சேவைகள் பிரகடனப்படுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2025.11.28 ஆந் திகதிய 2464/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அட்டவணையின் உருப்படி இல. 7 இற்கு இணங்கவும் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

3. இக்கட்டளை, 2025, திசெம்பர் 05 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழான உபபிரிவு (3) இன் ஏற்பாடுகளிற்கு உட்பட்டு செல்லுபடியாதல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, திசெம்பர் 04.

EOG 12-0015